www.tamilarangam.net

# ஈழத்தமிழ் மக்களின் வீரமிகு விடுதலைப்போராட்டத்துக்கும் அதன் முன்னணி இயக்கமாகிய தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் எமது ஏகோபித்த ஆதரவை நல்குவோம்.

கடந்த ஆண்டு ஆடிமாதத்தில் சிறீலங்காவின் இறுமை மிக்க வெலிக்கடைச் சிறைச்சாலையில் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட அய்ம்பத்து மூன்று தமிழீழத் தேசபக்தர்களையும், விடுதலைப் போராளிகளையும், தொடர்ச்சியாக இடம்பெற்ற, திட்டமிடப்பட்ட இனப்படுகொலைகளில் உயிர் நீத்த தமிழர்களையும் நினைவுகூர்ந்து, நாம் அஞ்சலி செலுத்துகின்றோம். ஈழத்தமிழ் தேசிய இனத்தின் அரசியல் வரலாற்றுடன் பின்னிப்பிணைந்த நிகழ்வுகள்தான், மீண்டும் மீண்டும் வெடித்துக்கிளம்பும் திட்டமிடப்பட்ட இனவாதப் படுகொலைகள். என்றும் இல்லாத வகையில் பயங்கர அழிவை ஏற்படுத்திய கடந்த ஆண்டு இனக்கொலை முயற்சி, பலநூறு தமிழர்களின் உயிர்களை பறித்ததுடன், பல ஆயிரம் தமிழர்களையும் அகதிகள் ஆக்கியது. தமிழர்களின் வீரமிக்க இத்தியாகங்கள் தமிழீழ விடுதலைப்போராட்டத்துக்கு வீரியத்தையும், வேகத்தையும் ஊட்டி அப்போராட்டத்தை ஓர் உன்னதநிலையை இன்று அடையச் செய்துள்ளது.

## எமது மக்கள்தான் எங்கள் கோட்டை

இனக்கொலையை இலக்காகக் கொண்ட கொடிய ஒடுக்கு முறைக்கு எதிராக தமிழ்மக்களின் சமாதான சனநாயக போராட்டங்கள் வலுவிழந்த வேளையில், தமிழ்மக்களின் நடுவில் புரட்சிகர ஆயுத எதிர்ப்பு தோன்றியது. தமிழ்மக்களின் இத்தேசிய ரீதியான எதிர்ப்பு, ஆயுதம் தரித்த புரட்சிகர விடுதலை இயக்கமாகிய "தமிழீழ விடுதலைப் புலிகள்" தோன்ற வழி சமைத்தது. ஒடுக்கப்பட்ட, வலுவிழந்த மக்களின் குழந்தைகளான விடுதலைப்புலிகள் அம்மக்களின் உன்னதமான விடுதலைக்காக தம்மை பூரணமாக அர்ப்பணித்துக் கொண்டார்கள். ஊழலுக்கு உட்பட்டு உளுத்துப்போன மேல்மட்ட தலைமைக்கு மாற்றாக ஒரு புரட்சிகர தலைமையை அரசியல், இராணுவ அமைப்பைக்கொண்ட இயக்கமாகிய தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று உருவாக்கியுள்ளனர். தேர்தல் அரசியலை நடாத்தி ஒடுக்கு முறையாளனாகிய எதிரியுடன் அரசியல் பேரம் பேசி கபடநாடகமாடும் இந்த மேல்மட்டத்தலைமை இன்று தமிழ்மக்களின் அவநம்பிக்கையையும், ஆத்திரத்தையும் சம்பாதித்துள்ளது. இலக்கை நோக்கிய பாதையில் புலிகளின் உறுதியிலும், அர்ப்பணிப்பிலும் நம்பிக்கை வைத்துள்ள மக்களின் முன்னர் இன்று இத்தலைமையானது அம்பலப்படுத்தப் பட்டு, அவமானப்பட்டு, ஆத்மபலத்தை இழந்து நிற்கிறது.

எமது மக்களின் வேதனையும், அவர்கள் வடித்த கண்ணீரும், சிந்திய இரத்தமும், அடக்குமுறை அரசாங்கத்துக்கு எதிரான ஆயுதங்களாக மாறும். போராட்டத்தை வேகப்படுத்தும். புலிகளின் உறுதியை இறுகச்செய்யும். மக்களுடன் வேர்விட்டு மக்களாலும் கோட்டையால் பாதுகாக்கப்பட்டு வரும் புலிகள், கடந்த பத்து ஆண்டு காலமாக வெற்றிகரமாக நிகழ்த்திய நீடிக்கப்பட்ட கொரில்லாப் போராட்டம், எதிரியை வெல்ல முடியாது என்ற எண்ணத்தை தகர்த்தெறிந்துள்ளது. அதனிலும் மேலாக ஒன்றுபட்ட மக்கள் ஆற்றலின் போராட்ட வெளிப்பாடுதான், சிங்கள அரசாங்கத்துக்கு எதிரான சவாலாக அமைந்துள்ளது.

தாக்குதல்களை எதிர்கொள்ள இயலாது முடங்கும் பாசிச அரசின் சீர்கெட்ட கூலிப்படை இராணுவம், வன்முறையை கட்டவிழ்த்து ஒழுக்கம் கெட்டு எமதுமண்ணில் கொடிய முறையில் கொலை வெறியாடிவருகிறது. இந்த வெறியாட்டத்தின் நோக்கம், தன்மானத்துக்காகவும், சுதந்திரத்துக்காகவும் போராடும் எமது மக்களின் உறுதியை குலைத்து அவர்களை அடிபணிய வைப்பதுடன், கொரில்லாப் போராளிகளை அவர்களின் தளமாகிய மக்களில் இருந்து அந்நியப்படுத்துவதுமாகும். ஆனால் அரசின்

www.tamilarangam.net


இந்த பயங்கரவாத நடவடிக்கை எதிர்மாறாக, பல முரண்பாடுகளைக் கொண்ட தமிழ்மக்களை தமது அரசியல் விடுதலைக்கான தீர்க்கமான ஒரு புரட்சிப்பாதையில் ஒருங்கு சேரவேவைத்துள்ளது.

## எதிரியை இனங்காண்போம்

ஈழத்தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கு ஒரேதீர்வு இராணுவத்தீர்வுதான் என்ற நிலைப்பாட்டையே பேரினவாத சிங்கள அரசு கடைப்பிடித்து வந்துள்ளதை வரலாற்று நிகழ்வுகள் இன்று எடுத்துக்காட்டுகிறது. இவ்வகையில் பயங்கரவாதத்தை களைவது என்ற போர்வையில், குற்றமற்ற தமிழ் மக்கள்மீது இனக்கொலைப்போரை பிரகடனப்படுத்தியதன் மூலம் சிங்கள இனவாத அரசு தனது அரச பயங்கரவாதத்தை உலக அரங்கில் அம்பலப்படுத்தியுள்ளது.

போராடும் தமிழ் மக்களதும்,மக்களின் முன்னணி இயக்கமாகிய தமிழீழவிடுதலைப்புலிகளினதும் உறுதியை எதிர்கொள்ள இயலாத சிங்கள ஆளும்வர்க்கமும், அதன் கூலிப்பட்டாளமும், அணிசேராமை என்ற தங்கள் போலி முகமூடியை களைந்து, தங்கள் இயல்பு நண்பர்களாகிய அமெரிக்க, பிரித்தானிய ஏகாதி-பத்திய வாதிகளையும், அவர்களது ஏவல்நாயாகிய சயோனிச இசுரேலையும் சிறிலங்கா கரையில் காலூன்ற கூவி அழைத்துள்ளனர்.

உலகஅரங்கில் வெறியாட்டமிடும் மொசாட் உளவுப்பிரிவும், பிரித்தானிய அதிரடிப்படையும் தமது "சூழ்ச்சித்திறனை" எமது மண்ணில் இறக்குமதி செய்துள்ளன. அதுமட்டுமல்ல, பிரித்தானிய ஏகாதிபத்தியம் கொழும்பு வானொலி நிலையத்தை "புதிய தேவைகளை நிவர்த்தி செய்ய" விரிவு படுத்துவதற்கு 55 இலக்கம் பவுண்களை நன்கொடையாக கொடுக்கவும் முன்வந்துள்ளது. தமிழ்மக்களின் இரத்தக்கறை படிந்த "தர்ம தீவம்" எனப்படும் சிறிலங்கா உலக ஏகாதிபத்தியங்களின் போர்விளையாட்டு மைதானமாக விரைவில் மாறி வருகிறது.

## சிறு அசைவு - பெருந்தும்

ஈழத் தமிழ் தேசிய இனத்தின் யதார்த்த சூழல்களை விழிப்புடனும், அவதானத்துடனும் அனுமானித்து நகர்ப்புற கொரில்லாப் போராட்டத்தை ஆற்றல் மிக்க ஆயுதப்போராட்ட வடிவமாக தமிழீழ விடு-தலைப்புலிகள் வளர்த்துள்ளனர். புலி இயக்கத்தின் அரசியல் போராளிகளின் ஆயுத நடவடிக்கைகள் தமிழ் மக்களின் தேசிய உணர்வினை மேம்படுத்துவதுடன் சிங்கள தேசிய இனத்தின் முரண்பாடுகளையும் கூர்மை அடையச் செய்துள்ளது. நவகாலனித்துவத்தின் சார்புநிலைப் பொருளாதாரம் சிறிலங்காவில் புரையோடி நெருககடியான காலகட்டத்தை அடைந்துள்ள நிலையில், அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதன் அடி வருடி சயோனிச இசுரேலையும் வெளிப்படையாக அழைத்துள்ளது சிறிலங்கா அரசாங்கம். இது அடக்கு முறை அரசு இயந்திரம் நெறிபிறழ்ந்து நலிவுற்று செல்வதற்கான அறிகுறியாகும்

## கடல் கடந்த தமிழர்களின் கடமைகள்

விடுதலைப்பாதையில் தமிழ்மக்களின் நீடிக்கப்பட்ட கொரில்லா போராட்டம் இன்று மக்கள் போராட்டமாக தொடர்ந்து விரிவடைந்து வருகிறது. கடல் கடந்து வாழும் தமிழ்மக்கள் இந்த விடுதலைப்போராட்டத்தில் தங்கள் பங்கு என்ன என்பதை தீர்மானித்துக் கொள்ள வேண்டும். பூரணவிழிப்பு ணர்வுடன் வரலாற்று உண்மைகளை கருத்திற் கொண்டு கடல்கடந்து வாழும் தமிழ் தேச பக்தர்கள் வீரமிகு ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கும் அப்போராட்டத்தை முன்னெடுத்துச்செல்லும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் தமது தார்மீக பொருளாதார ஆதரவை உறுதி செய்தல் வேண்டும்.

www.tamilarangam.net



## ஒடுக்கும் பெருந்தேசத்தின் முற்போக்கு சக்திகளின் கடமை

மார்க்சிச, லெனினிச கோட்பாடுகளுக்கமைந்த பாட்டாளி வர்க்க நடைமுறைகளைக் கைகொள்ளும் சிங்கள தேசத்தின் முற்போக்காளர்களையும், புரட்சிவாதிகளையும் நாம் கேட்டுக்கொள்வது என்னவென்றால் மேன்மை மிக்க புரட்சிகர ஆசான்கள் முன்வைத்த கொள்கைத் திட்டத்தை தழுவி, ஒடுக்கப்படும் ஈழத்தமிழ் நாட்டின் விடுதலைப் போராட்டத்துக்கு உங்கள் நிபந்தனையற்ற ஆதரவை நல்குங்கள் என்பதே. சிங்கள பூர்சுவா ஆளும் வர்க்கம், பேரினவாத கோட்பாட்டு மேலாதிக்கத்துக்கு வலுவேற்றி, ஈழத்தமிழ் தேசிய இனத்தின் மீது கொடூரமான பாதகமிக்க ஒடுக்குமுறையை கையாண்டுள்ளது. எனவே தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவு என்ற அரசியல் கொள்கைத்திட்டம் ஒடுக்கும் தேசத்தினதும் ஒடுக்கப்படும் தேசத்தினதும் வர்க்கப் போராட்டங்களுக்கு வழிவகுக்கும். பூர்சுவா கோட்பாட்டின் மேலாதிக்கத்தை தகர்ப்பதற்கு தெற்கில் உள்ள புரட்சிகர மாக்சிசவாதிகள் ஒடுக்கப்படும் தமிழ்தேசத்தின் பிரிந்து செல்லும் உரிமையை, அதாவது பிரிந்து சென்று சுதந்திர சோசலிச தமிழீழம் அமைக்கப்படுவதை மிகவும் தீர்க்கமாக ஆதரித்து கோட்பாட்டு ரீதியான ஒரு போராட்டத்தை முன் வைத்தல் வேண்டும்.

## சர்வ தேசியம்

தமிழீழ விடுதலைப் போராட்டமானது ஒடுக்கப்படும் தேசத்தின் போராட்டம் என்ற வகையில் ஒடுக்கு முறையை நோக்கமாகக் கொண்ட ஏகாதிபத்தியம், நவ காலனித்துவம், சியோனிசம் மற்றும் வகுப்புவாதம் போன்ற எதிர் புரட்சிச் சக்திகளுக்கு எதிராக அகிலத்தின் புரட்சி சக்திகள் தொடுக்கும் போராட்டத்தின் ஓர் அங்கமாகும், எமது மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் புரட்சிகர ஆயுதப் போராட்டத்துக்கு ஆதரவு தருமாற அகிலத்தின் முற்போக்கு சக்திகளையும் புரட்சிகர விடுதலை இயக்கங்களையும் நாம் வேண்டுகிறோம்.

> "எமது சுதந்திரத்தை நாமே போராடி வென்றெடுக்கும் மனோதிடமும், நம்பிக்கையும் உறுதிப்பாடும் எங்களிடம் உண்டு."
>
> — வே. பிரபாகரன்


லண்டன் தமிழ் மன்றம்

**LONDON TAMIL MANRAM**

51 SELBORNE GARDENS, HENDON, LONDON NW 4 - TEL: 01-202-7190



Published by London Tamil Manram, 51 Selborne Gardens, London NW4.
Printed by Grafton Litho Ltd (TU) 5b Old Town, London SW4 0JT


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்